**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**அசல் வழக்கு எண். 95/2022**

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 01 ஆம் நாள் வியாழகிழமை என்பவரது சாட்சியாகிய **<u>இராமகிருஷ்ணன் PW1</u>** இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 01.02.2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | இராமகிருஷ்ணன் | | | |
| Father Name | : | முத்தையாபிள்ளை | Court | : | |
| Village | : | புத்தகரம், பொன்செய், | Taluk | : | |
| Calling | : | | Religion | : | |
| Age | : | 72 | | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1ம் சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

16.12.2022 தேதியிட்ட வெங்கடாச்சலம் பிள்ளை பெயரில் உள்ள கணினிபட்டா **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 23.08.2021 தேதியிட்ட வெங்கடாச்சலம் பிள்ளை வாதிக்கு எழுதிக்கொடுத்த உயில் பத்திரத்தின் அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 31.05.2022 தேதியிட்ட வெங்கடாச்சலம் பிள்ளையின் இறப்பு சான்றிதழின் கணினி நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. 18.07.2022 தேதியிட்ட வெங்கடாச்சலம் பிள்ளையின் வாரிசு சான்றிதழின் கணினி நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.